2. கவன ஈர்ப்பு.

(அ) ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் 'எக்ஸ்ரே' கருவி சரியாக இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் ஒரு பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். டேனியல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டான் அரசு மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக எக்ஸ்ரே கருவி இயங்காததால் அப்பகுதி நோயாளிகள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் உள்ள 100 எம்.ஏ. ஊடுகதிர் இயந்திரம் செப்டம்பர் 1986-ல் பழுதுபட்டு சரிவர இயங்கவில்லை. அது உடனே பழுது செய்யப்பட்டு, அக்டோபர் 1986 முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஊடுகதிர் இயந்திரம் இப்பொழுது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. நோயாளிகளுக்கு எக்ஸ்ரே மருத்துவமனையில் எடுக்கப்பட்டு வருகிறது. நோயாளிகளுக்குத் தேவைப்படும் சிகிச்சை அளிப்பதில் எவ்வித குறைபாடுகளும் இல்லை.

(ஆ) மண்டபத்திலுள்ள 'தமிழ்நாடு முத்து நிறுவனம்' செயல் படாமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, எம். செல்லமுத்து, கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர் அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.